புரட்சிப்
# பெரியார் முழக்கம்
திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு
www.dvkperiyar.com



ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன்

• திருவள்ளுவர் ஆண்டு 2055 • நவம்பர் 21, 2024 • புரட்சி 24 • முழக்கம் 46 • விலை ரூ.3.00

# ஒன்றிய ஆட்சி அமைப்புகளே திராவிட மாடல் ஆட்சிக்குப் பாராட்டு!

திராவிட மாடல் ஆட்சி - ஒன்றிய ஆட்சியின் புறக்கணிப்புகளைத் திட்டவட்டமான ஆதாரங்களுடன் பேசி வருகிறது. தமிழ்நாடு வரலாறு காணாத மழைப் பொழிவால் கடும் பாதிப்புக்கு உள்ளான போது, ஒன்றிய ஆட்சி, மாநில நிலுவையில் இருந்த ரூ.450 கோடியை மட்டும் வழங்கி விட்டு தேசியப் பேரிடர் நிதியில் இருந்து ஒரு காசு கூட தராமல் மறுத்துவிட்டது. மாநிலப் பேரிடர் நிதி என்பது மாநிலத்துக்கு வழங்க வேண்டிய கட்டாய நிதி. நிதியமைச்சர் நிர்மலா, தேசியப் பேரிடர் நிதியை மறுத்ததை மறைத்து, மாநிலப் பேரிடர் நிதியை முழுமையாக வழங்கியதாக உண்மைக்கு மாறான கருத்தைத் தெரிவித்தார். கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் மக்கள் மன்றத்தில் இதுதான் முக்கியப் பிரச்சனையானது. தமிழ்நாடு அரசை ஒரு போதும் வஞ்சிப்பதில்லை என்ற உண்மைக்கு மாறாக பாஜகவினரின் பரப்புரைக்கு தமிழ்நாடு வந்துள்ள நிதி ஆணையத் தலைவர் பேட்டியையே பதிலாகக் கூற முடியும்.

“இதுவரை நிதிக்குழு ஆணையம் இந்தியாவில் 12 மாநிலங்களுக்குச் சென்றுள்ளது. ஆனால் தமிழ்நாடு மட்டும்தான், ஏன் நிதியை அதிகரிக்க வேண்டும் எனத் தெளிவாக விளக்கமளித்துள்ளது. ஆழ்ந்த ஆராய்ச்சி, தெளிவான பகுப்பாய்வுகளுடன் சமர்ப்பிக்கப்பட்டுள்ள இந்த அறிக்கைக்காகத் தமிழ்நாடு அரசுக்கு நன்றி தெரிவிக்கிறோம். இது ‘மாஸ்டர் கிளாஸ்’ அறிக்கை” என்று நிதி ஆணையக்குழுவின் தலைவர் அரவிந்த பனகாரியா மனம் திறந்து பாராட்டியுள்ளார்.

“மாநிலங்களின் செலவினங்கள் தொடர்ந்து அதிகரித்து வரும் நிலையில், ஜி.எஸ்.டி வரி விதிப்பு தடையாகிவிட்டது. நிதி ஆதாரங்களை அதிகரிக்கும் வாய்ப்புகள் - கதவடைக்கப்பட்டுவிட்டன. இந்த நிலையில் ஒன்றியம் வரிகளாக ஈட்டும் பெரும் தொகையில் இருந்து மாநிலங்களுக்கு தரும் பங்கீட்டை 50 சதவீதமாக உயர்த்த வேண்டும். மாநில வளர்ச்சியில் தான் நாட்டின் ஒட்டுமொத்த வளர்ச்சி அடங்கியிருக்கிறது. இதைச் செயல்படுத்தும் போது கூட்டாட்சித் தத்துவமும் வலிமையாகிறது” எனத் தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் மிகச்சரியாக நிதிக்குழுத் தலைவருக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

தமிழ்நாட்டில் ‘திராவிட மாடல்’ ஆட்சிக்கு எதிராகத் தரம்தாழ்ந்த ‘அரசியலை’ எதிர்க்கட்சிகள் நடத்தி வருவதை மக்கள் கவனித்துக்கொண்டிருக்கிறார்கள். ஏதோ ஒரு வீதியில் நிகழும் சம்பவங்கள் கூட தமிழ்நாட்டின் பிரச்சனையாக ஊதிப்பெருக்கப்படுகின்றன. சமூக ஒழுங்கு மீறல்களை எல்லாம் சட்டம் ஒழுங்கு சீர்குலைந்துவிட்டது என்று கூப்பாடு போடுகிறார்கள்.

மருத்துவமனையில் ஒரு மருத்துவர் தாக்கப்பட்டால், தமிழ்நாடு முழுவதும் பணியாற்றும் பல்லாயிரக்கணக்கான மருத்துவர்களும் ஒவ்வொரு நாளும் தாக்குதலுக்கு உள்ளாக்கப்படுவதாக மிகைப்படுத்தப்படுகிறது. அற்ப அரசியலுக்கு முகம் தராமல் இவற்றைப் புறந்தள்ளி ஒவ்வொரு நாளும் தமிழ்நாட்டின் கட்டமைப்பை வலிமைப்படுத்தும் திட்டங்களை முதல்வர் அறிவித்துக்கொண்டு வருகிறார். மாவட்டந்தோறும் அதிகாரிகளை நேரடியாக சந்தித்து வளர்ச்சித் திட்டங்களை முதல்வரும், துணை முதல்வரும் ஆய்வுக்குள்ளாக்கி வருவதை மக்கள் பார்த்துக் கொண்டிருகிறார்கள். அரசின் செயல்பாடுகளை நிதிக்குழு மட்டும் அல்ல, ஒன்றிய ஆட்சியின் கீழ் உள்ள நிதி ஆயோக்கும் பாராட்டுகிறது.

கடந்த ஜூலை மாதம் ‘2023-24’ ஆண்டுக்கான நிலைத்த வளர்ச்சி இலக்கு குறியீட்டு தரவரிசைப் பட்டியலை ( *sustainable development goals index* ) நிதி ஆயோக் வெளியிட்டது. அதில் வறுமை ஒழிப்பு, பட்டினி இல்லாமை, பாலின சமத்துவம், தரமான கல்வி உள்ளிட்ட 16 இலக்குகளில் இந்திய சராசரியை விடத் தமிழ்நாடு அதிக விகிதத்தில் உள்ளதைச் சுட்டிக்காட்டியது. ஒன்றிய சுகாதாரத்துறை அமைச்சர் ஜெ.பி.நட்டா, தமிழ்நாடு அரசின் மருத்துவக் கட்டமைப்பை நாடாளுமன்றத்திலேயே பாரட்டுகிறார். மக்களைத் தேடி மருத்துவம் திட்டத்துக்கு அய்.நா சான்றிதழ் வழங்குகிறது.இப்படி நீண்ட பட்டியலிடலாம் மக்கள் நலனுக்கான திட்டங்களை..

# தென் கொரியாவில் ஒலிக்கும் பெரியார் குரல்

**ரா.பிரகாசு**

அமெரிக்க அதிபர் தேர்தலில் டொனால்டு டிரம்ப் வெற்றி பெற்றதை அடுத்து, அங்கு கருக்கலைப்பு உரிமை பறிபோகும் என்ற அச்சம் பெண்களிடத்தில் எழுந்திருக்கிறது. இதனால் அமெரிக்காவில் 4-பி இயக்கத்தை ஆதரிக்கும் பெண்கள் கூட்டம் பெருகி வருகிறது. உலகெங்கும் பாலியல் வன்கொடுமைக்கு எதிராகப் பெண்களை ஒருங்கிணைக்கும் ‘மீ டூ’ இயக்கம் போல, இந்த ‘4-பி’ என்பது கலாச்சாரங்கள், புனிதங்களின் பெயரால் பறிக்கப்படும் பெண்ணுரிமைகளை மீட்பதற்கான இயக்கமாக உருப்பெற்று வருகிறது.

இந்த இயக்கம் 2010-ஆம் ஆண்டில் தென் கொரியாவில் சமூக வலைத்தளங்களின் மூலம் உருவானது. படிப்படியாக வலுப்பெற்று வெவ்வேறு நாடுகளுக்கும் பரவி வருகிறது. இதில் கவனிக்கத்தக்க அம்சம் என்னவென்றால், பெண் விடுதலைக்காகப் பெரியார் முன்வைத்த கருத்துக்களே இந்த ‘4-பி’ இயக்கத்தால் ஒருங்கிணைந்த பெண்கள் முன்வைக்கும் முழக்கமாக இருக்கிறது.

“1. பெண்கள் படிக்க வேண்டும்.

2. பெண்கள் தங்கள் வாழ்க்கையைத் தாங்களே நடத்திக் கொள்ளக்கூடிய அளவுக்கு ஊதியம் தேட ஆரம்பித்து விட்டாலே ஆண்களுக்கு அடிமையாக இருக்க வேண்டிய அவசியம் இல்லை.

3. ஆண்களைப் போல உருவத்தில் வேறுபாடு தெரியாத அளவுக்கு பெண்களும் சட்டை, பேண்ட், லுங்கி அணிய வேண்டும்.

4. குழந்தை பெறும் இயந்திரங்களாக பெண்கள் இருக்கக்கூடாது. தேவைப்பட்டால் கருப்பையை அறுத்தெரியவும் தயங்கக்கூடாது.

5. நகை மாட்டிக்கொள்ளும் ஸ்டாண்டுகளாகவும் பெண்கள் இருக்கக்கூடாது.”

போன்ற முற்போக்குக் கருத்துக்களைப் பெரியார் முன்வைத்து கிட்டத்தட்ட ஒரு நூற்றாண்டாகிவிட்டது. இதே கருத்துக்களை முன்வைத்துதான் இந்த ‘4-பி’ இயக்கமும் உருவாகியிருக்கிறது.

## ‘4-பி’ என்றால் என்ன?

கொரிய மொழியில் ‘bi’ என்றால் மறுப்பது என்று பொருள்படுகிறது. ‘4-பி’க்களை மறுப்பது என்பது இதன் குறிப்புச்சொல். bihon (திருமணம் கூடாது), bichul-san (குழந்தை கூடாது), biyeonae (ஆண்களோடு காதல் கூடாது), bisekseu (ஆண்களோடு உடலுறவு கூடாது) என்பது அவர்கள் முன்வைக்கும் நான்கு முழக்கங்கள். காதல் கூடாது, திருமணம் கூடாது, உடலுறவு கூடாது என்று பெண்ணிய செயற்பாட்டாளர்கள் கூறுவது இயற்கைக்கு முரணானது என்று எதிர்ப்புகள் எழுகின்றன. ஆனால் அத்தகைய முழக்கங்களை முன்வைப்பதற்கான நியாயமான காரணங்கள் பெண்ணிய செயற்பாட்டாளர்களிடத்தில் உள்ளது.

உலகின் பணக்கார நாடுகளில் ஒன்றாக உருவெடுத்திருக்கிறது தென் கொரியா. தொழில்நுட்ப ரீதியாக மிகப்பெரிய வளர்ச்சியை எட்டியிருக்கிறது. வேலைவாய்ப்புகளும் கொட்டிக்கிடக்கின்றன. ஆனாலும் இத்தகைய வளர்ச்சியை அனுபவிப்பதில் ஆண்களுக்கும், பெண்களுக்கும் இடையில் மிகப்பெரிய வேறுபாடு இருக்கிறது. ஆண்களுக்கு நிகராக ஊதியம் பெண்களுக்குக் கிடைப்பதில்லை. திருமணம் செய்துகொள்வது, குழந்தை பெற்றுக்கொள்வது, பராமரிப்பது, குடும்பத்திற்கான வீட்டு வேலைகளைச் செய்வது என்ற கட்டாயங்கள் இன்னமும் பெண்களுக்கு இருக்கிறது. ஆண்கள் வேலைக்குச் செல்கிறார்கள், ஊதியம் பெறுகிறார்கள், பொருளாதார தன்னிறைவை அனுபவிக்கிறார்கள். ஆனால் பெண்கள் மட்டும் இன்னும் எத்தனைக் காலத்திற்கு வீட்டு அடிமைகளாகவே இருக்க வேண்டுமென்று கேள்வி எழுப்புகிறார்கள்.

பெண்கள் தங்களை அழகுப்படுத்திக்கொள்ள வேண்டுமென்ற எண்ணத்தை விடுவிக்க வேண்டுமென்பதும் இவர்கள் பரப்புரையில் முக்கிய அங்கம். மொத்தத்தில் கலாச்சார கட்டாயங்களைக் கட்டுடைத்து, பொருளாதார சுதந்திரத்தைப் பெறுவதற்கான முன்னெடுப்புக் கருவியாக ‘4-பி’ இயக்கத்தை பெண்ணிய செயற்பாட்டாளர்கள் பயன்படுத்துகின்றனர். 2010ஆம் ஆண்டிலேயே எழத் தொடங்கிய இம்முழக்கங்கள், 2016 ஆம் ஆண்டு சியோலில் பெண் ஒருவர் ரயில் நிலைய கழிவறையில் ஒரு ஆணால் கொல்லப்பட்ட பிறகு வேகமெடுத்தது.

## குழந்தை பெறும் கருவியல்ல பெண்கள்!

இந்த 4-பி இயக்கம் வலுப்பெற்றதில் தென் கொரிய அரசுக்கும் முக்கியப் பங்கு உள்ளது. குழந்தை பிறப்பு விகிதம் வேகமாக சரியும் நாடுகளில் ஒன்றாக தென் கொரியா உள்ளது. இதை ஒரு தேசிய இடராகக் கருதும் அந்நாட்டு அரசு, புதுமணத் தம்பதிகளுக்கு மானிய விலையில் வீடுகள் தருகிறது. திருமணம் செய்துகொள்ளவும், குழந்தை பெற்றுக்கொள்ளவும் வரிச்சலுகைகள் வழங்கப்படுகின்றன. அரசின் இத்தகைய முடிவுகள் பிற்போக்குத்தனமானது என்று பெண்ணிய செயற்பாட்டாளர்கள் கண்டிக்கின்றனர்.

குறிப்பாக, 2016ஆம் ஆண்டில் தென் கொரிய அரசு pink birth map என்ற தேசியத் திட்டம் ஒன்றை அறிமுகப்படுத்தியது. அந்நாட்டின் ஒவ்வொரு மாவட்டத்திலும் குழந்தை பெறத் தகுதியான வயதில் உள்ள பெண்கள் எத்தனை பேர் உள்ளார்கள் என்பதை தெரியப்படுத்தும் மோசமான திட்டம் அது. இந்தத் திட்டத்திற்கு எதிராக பொங்கியெழுந்த அந்நாட்டுப் பெண்கள் முன்வைத்த முழக்கம் நூறு ஆண்டுகளுக்கு முன்பே இங்கு பெரியாரால் முன்வைக்கப்பட்டது. “எங்கள் கருப்பை பொதுச்சொத்து அல்ல. பெண்கள் குழந்தை பெறும் இயந்திரமும் அல்ல” என்பதுதான் அந்த முழக்கம்.

இப்போது அந்த முழக்கம் அமெரிக்காவிலும் எழத் தொடங்கியுள்ளது. ஆணாதிக்கத்திற்கெதிரான இந்த முழக்கங்கள் நாளை உலகெங்கும் பரவும். அந்த முழக்கங்களின் ஊடாக பெரியார் கொள்கைகளும் உலகமயம் ஆகும்!

**தலையங்கம்**

# “பிராமணன்” யார்?

தமிழ்நாட்டில் தங்களுக்குப் பாதுகாப்பு இல்லை என்று பார்ப்பனர்கள் நடத்திய ஆர்ப்பாட்டம் பல்வேறு எதிர்வினைகளை உருவாக்கிவிட்டது. இந்து மக்கள் கட்சியைச் சார்ந்த அர்ஜுன் சம்பத் என்ற மிகவும் பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தைச் சார்ந்த ஒருவரை முன்னிறுத்தி, நடத்தப்பட்ட போராட்டம் இது. ஆர்ப்பாட்டத்துக்கு சில நாட்களுக்கு முன் ஆளுநர் மாளிகைக்குச் சென்று பார்ப்பனர்கள் தங்களுக்குப் பாதுகாப்புக் கேட்டு, ஆளுநரிடம் மனு ஒன்றை அளித்தனர். அதில் அர்ஜுன் சம்பத்தைக் காணவில்லை. வீதிக்கு வந்துப் போராடுவதற்கு மட்டும் ‘அர்ஜுன் சம்பத்கள்’ தேவைப்படுகிறார்கள்.

தமிழ்நாட்டில் இப்போது பார்ப்பனர்கள் சந்திக்கும் ஆபத்துகள் எவை என்று, அந்த ஆர்ப்பாட்டத்தில் பேசிய எவரும் ஒரு வார்த்தைக்கூட பேசவில்லை. மாறாகத் தமிழ்நாட்டில் சிறப்புடன், இந்தியாவுக்கே முன்மாதிரியாக செயல்படும் ‘திராவிட மாடல் ஆட்சி’ தான் அவர்களை உறுத்திக்கொண்டிருக்கிறது. “திராவிடம் பேசும் கும்பலை விரட்டியடிக்க வேண்டும்; அமைதி காக்கக் கூடாது, பரசுராமன்களாக மாற வேண்டும்” என்று மதுவந்தி என்ற ஒரு பார்ப்பனப் பெண் பேசியிருக்கிறார். பரசுராமன் என்ற ‘பிராமணன்’ கோடாரியால் ‘சத்திரியர்களை’ வெட்டி வீசினான் என்று புராணம் கூறுகிறது.

கஸ்தூரி என்ற பார்ப்பன நடிகை, அரசர்களுக்கு அந்தப்புரச் சேவைக்கு வந்தவர்கள் தெலுங்கர்கள் என்று பேசியது கடும் கண்டனங்களுக்கு உள்ளாகி இப்போது அவர் சிறையில் அடைக்கப்பட்டிருக்கிறார்.

பார்ப்பனர்களுக்குப் பாதுகாப்புக் கோரி நடத்தப்பட்ட ஒரு ஆர்ப்பாட்டத்தில் ‘தெலுங்கர்கள்’ எதிர்ப்புப் பேச்சு எப்படி வருகிறது? பாஜகவின் முன்னணித் தலைவர்களில் ஒருவரான அமர்பிரசாத் ரெட்டி, இதற்கு முதல் கண்டனக் குரலை எழுப்பினார். அதைத் தொடர்ந்து அனைத்து தெலுங்கர்களையும் கூறவில்லை என்றார். யாரை குறிவைத்துப் பேசினார்? தமிழ்நாடு முதல்வரின் குடும்பம் என்பதை, தனது பேச்சில் மறைமுகமாகச் சுட்டிக்காட்டினார். தெலுங்கு வம்சாவழி வந்த முதல்வர் குடும்பம் எப்படித் தமிழர்களின் தலைவராக இருக்க முடியும் என்ற ஆணவமும், திமிரும் அதில் அடங்கி இருந்தது.

திராவிட எதிர்ப்பாளர்களே தமிழ்ப் பாதுகாப்பு என்ற முகமூடிக்குள் பதுங்கி உண்மையான எதிரியான பார்ப்பனியத்தைத் திசை திருப்ப, தெலுங்கர்கள், கன்னடர்கள் தமிழர்களின் எதிரி என்று எதிரியை மடைமாற்றம் செய்கிறார்கள். பார்ப்பனர்களுக்கு இது பாதுகாப்பாகிவிட்டது. சேரன்மாதேவி குருகுலத்தில் வ.வே.சு.அய்யர், ‘வர்ணாசிரம பாகுபாடுகளைப் பின்பற்றியதை அன்று காங்கிரசில் இருந்த பெரியாரும், வரதராஜுலு நாயுடுவும் எதிர்த்தனர். அப்போதே பெரியார் என்ற கன்னடரும், வரதராஜுலு நாயுடு என்ற தெலுங்கரும் தான் இதை எதிர்க்கிறார்கள் என்று மடைமாற்றிப் பேசினார் வ.வே. சு.அய்யர். நாம் தமிழர் கட்சியின் ஒருங்கிணைப்பாளர் சீமான், வ.வே.சு அய்யரின் சீடராகவே பேசிவருகிறார். இப்போது நடிகை கஸ்தூரி பேசியதைக் கருத்துரிமை என்று கூறி அவர் கைதைக் கண்டிக்கிறார். பார்ப்பனர்கள் கூட மவுனம் காக்கிறார்கள். ஆர்ப்பாட்டத்தை ஏற்பாடு செய்த அர்ஜுன் சம்பத்திடமிருந்து கூட இதுவரை கண்டனம் வரவில்லை. சீமான் கொதிக்கிறார்.

பிராமணர்களை பார்ப்பனர்கள் என்று கூறக்கூடாது என்று ஆர்ப்பாட்டத்தில் பலரும் கண்டனக் குரல் எழுப்பியுள்ளனர். ‘பிராமணர்கள்’ என்பவர்கள் இந்திய அரசியல் சட்டத்தின் படி ‘குடிமகன்கள் அல்ல’. காயத்ரி மந்திரம் ஓதி உபநயனம் செய்து பூணூல் அணிவிக்கப்பட்டவுடன் அவர்கள் ‘இந்தியக் குடிமக்கள் நிலைமைக் கடந்து இரண்டாவது பிறவி எடுத்து “பிராமணர்கள்” ஆகிவிடுகிறார்கள். அரசியல் சட்டத்தைப் பின்னுக்குத்தள்ளி ‘மனு சாஸ்திரமே’ தங்களுக்கான சட்டம் என்று அறிவிக்கிறார்கள். ‘பிராமணன்’ ஆக உயர்ந்துவிட்டால், ‘பிராமணர’ல்லாத ஏனைய மக்கள் ‘சூத்திரர்கள்’ என்றும், ‘பிராமணர்’களுக்கு கட்டுப்பட்டவர்கள் என்றும், ஏழு வரையறைகளை மனுசாஸ்திரம் கூறுகிறது. அதில் ஒன்று ‘பிராமணரின் வைப்பாட்டி மக்கள்’ என்பதாகும். அரசியல் சட்டத்தை புறந்தள்ளிவிட்டு ‘மனு’வின் சட்டத்தை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று பார்ப்பனர்கள் ‘சூத்திரர்களை’ மிரட்டுகிறார்கள். கட்டாயப்படுத்துகிறார்கள். இந்திய அரசியல் சட்டம் மட்டுமே தங்களைக் கட்டுப்படுத்தும் என்று சமத்துவத்தை ஏற்கும் குடிமக்கள், ‘மனுசாஸ்திரப்படி’ ‘பிராமணனை’ ஏற்க முடியாது என்று சுயமரியாதையோடு கூறுகிறார்கள். இதில் குற்றமிழைப்பது “பிராமணர்களா”? அதை ஏற்க மறுக்கும் மானமுள்ள இந்தியக் குடிமக்களா?

காந்தி, இராமகிருஷ்ண பரமஹம்சர், விவேகானந்தர் போன்ற ‘சனாதன’ ஆதரவாளர்களே ‘பூணூல்’ அணிவதை எதிர்த்தனர். பாரதியும், வைணவத்தில் சீர்திருத்தம் செய்வதாகக் கூறிய இராமானுஜரும் ‘பூணூல்’ பார்ப்பனர்களுக்கு மட்டுமே தனி உரிமையல்ல என்று, ‘பிராமண’ மேலாதிக்கத்தை எதிர்த்தனர். பார்ப்பனப் பெண்களே ‘பிராமண தர்மப்படி’ சூத்திரர்கள் தான். அவர்கள் வேதங்களைக் கேட்கக் கூடாது, உபநயன உரிமை கிடையாது. இசை, நாட்டியம் உள்ளிட்ட கலைகளில் பெண்கள் ஈடுபடுவதை பிராமணிய சட்ட நூலான ‘மனுதர்மம்’ இழிவாகப் பேசுகிறது. பெண்கள் சுதந்திரமாக செயல்படக்கூடாது, தகப்பனுக்கும், கணவனுக்கும், மகனுக்கும் அடங்கிப் போக வேண்டும் என்று வரையறுக்கிறது. மனுதர்மப்படி பெண்கள் மறுமண உரிமை தண்டனைக்குரியக் குற்றம். ‘மனுதர்மக் கட்டளைகளை முற்றாகப் புறந்தள்ளி, திரைப்படங்களில் நடித்துக் கொண்டு, அரசியல் சட்டத்தின் விவாகரத்து உரிமைகளைப் பயன்படுத்திக் கொண்டு வரும் பார்ப்பனப் பெண்கள் ‘பிராமணர்களுக்காக’ போர் முழக்கம் செய்ய என்ன உரிமை இருக்கிறது என்று கேட்கிறோம். பெண்களை அவமதித்தாலும் எங்கள் தர்மமே மேலானது” என்று கூறுகிறார்களா?

மக்கள் கோரிக்கைகளை கடவுளிடம் அர்ச்சனை வழியாகக் கொண்டு செல்லும் சக்தி தங்களுக்கு இருப்பதாகக் கூறும் பார்ப்பனர்கள், கடவுளை கைவிட்டு வீதிக்கு வந்து போராடுவது ஏன்? ‘கடவுள் சக்தி’ பாமர மக்களை ஏமாற்றுவதற்கு தான் என்கிறார்களா?

சரி, முதல்வர் குடும்பத்தை இவ்வளவு கீழ்த்தரமாக பேசிய கஸ்தூரியின் பேச்சுக்குப் பிறகும் சமூக நாகரீகத்தோடு தமிழ்நாடு அமைதியாகவே கடந்துதான் போகிறது. பார்ப்பனர்களுக்கு தமிழ்நாடு பாதுகாப்பானது என்பதற்கு இதைவிட வேறு சான்று வேண்டுமா? காந்தி கொலை செய்யப்பட்ட போது வட நாட்டில் பார்ப்பனர்கள் தாக்கப்பட்டார்கள். அப்போது அமைதி வேண்டுகோள் விடுத்து பார்ப்பனர்களைப் பாதுகாத்தது தமிழ்நாட்டில் பெரியாரும், திராவிட இயக்கமும் தான் என்பதைப் பார்ப்பனர்கள் நினைத்துப் பார்க்க வேண்டும்.

## ஜாதிக்கு அடையாளம் உண்டா?



- வர்ணசிரமத் தர்மத்தைக் காப்பாற்ற எந்த அதர்மத்தையும் செய்யலாம் என்றான் பார்ப்பான்; பின் தர்மம் கெட்டது.

- பல ஜாதி மாடுகளை எடுத்துக்கொண்டால், இது நெல்லூர் மாடு; இது காங்கேயம் மாடு; இது மணப்பாறை மாடு; இது பர்கூர் மாடு என்று பிரித்து அடையாளம் காட்டலாம். நாயை எடுத்துக்கொண்டாலும், இது கோம்பை நாய், இது ராஜபாளையம், இது புல்டாக், இது அல்சேஷன் என்று அடையாளம் காட்ட முடியும். ஆனால் மனிதரில் எதைக் கொண்டு கூற முடியும். பார்ப்பனப் பெண், செட்டியார் பெண், நாயுடு பெண், பறையர், சக்கிலிப் பெண் இவர்களை எவ்வித அடையாளமும் இன்றி அம்மணமாக நிறுத்தினால், இதில் பார்ப்பனப் பெண் யார், செட்டியார் பெண் யார், நாயுடு பெண் யார், பறையர், சக்கிலிப் பெண் யார் என்று எதைக் கொண்டு அடையாளம் காட்டுவாய்?

- உங்களை யாராவது கிராமவாசிகள் துன்புறுத்தினால், இழிவாய் நடத்தினால் எதிர்த்து நிற்க வேண்டும். முடியாவிட்டால் வேறு பட்டணத்துக்குக் குடியேறிவிட வேண்டும். அங்கும் சீவனுத்துக்கு மார்க்கமில்லாவிட்டால் இம்மாதிரியான கொடுமையான மதத்தை உதறித் தள்ளிவிட்டுச் சமத்துவமுள்ள மதத்திற்குப் போய்விட வேண்டும். அதுவும் முடியாவிட்டால், வெளிநாடுகளுக்காவது கூலிகளாய்ப் போய் உயிரையாவது விட வேண்டும். இம்மாதிரியான உறுதியான முறைகளைக் கையாளத் துணிவில்லையெனில், உங்கள் மீது சுமத்தப்பட்ட இழிவு சுலபத்தில் ஒழியாது என்றே சொல்லுவேன்.

- தொழில் பாகுபாட்டைக் கொண்டு ஜாதி வகுக்கப்பட்டதே ஒழியப் பிறவியைக் கொண்டு அல்ல என்கின்றனர் ஒரு சிலர். ஒரு மனிதன் காலையில் தச்சனாகவும், நண்பகலில் வியாபாரியாகவும், இரவில் ஆசிரியனாகவும், மறுநாள் காலை உழுவோனாகவும், பகலில் நெய்வோனாகவும், இரவில் காவல்காரனாகவும் ஏன் இருக்கக் கூடாதென அவர்களைக் கேட்கிறேன்.

## சேலம் கிழக்கு மாவட்டத் தோழர்கள் கழகப் பொதுச்செயலாளருடன் சந்திப்பு



*19.11.2024 அன்று சென்னையில் உள்ள கழகத் தலைமை அலுவலகத்தில் கழகப் பொதுச்செயலாளர் தோழர் விடுதலை இராசேந்திரன் அவர்களை சேலம் மாவட்டக் கழகத் தோழர்கள் மரியாதை நிமித்தமாக சந்தித்தனர்.*

*இச்சந்திப்பில் சேலம் மாவட்டக் கழகப் பணிகள் குறித்து பொதுச்செயலாளர் ஆர்வமுடன் கேட்டறிந்தார். மேலும் நங்கவள்ளியில் டிசம்பர் 01ஆம் தேதி நடைபெறும் பெரியாரியல் பயிலரங்க அழைப்பிதழை நங்கவள்ளி ஒன்றியப் பொறுப்பாளர் கிருஷ்ணன் வழங்கினார்.*

*இதில் கழகத் தலைமை நிலையச் செயலாளர் தபசி குமரன், சென்னை மாவட்டச் செயலாளர் இரா.உமாபதி, சேலம் கிழக்கு மாவட்டச் செயலாளர் டேவிட், சேலம் கிழக்கு மாவட்ட நிர்வாகிகள் கருப்பூர் சக்தி, நங்கவள்ளி அன்பு, நங்கவள்ளி கிருஷ்ணன், நங்கவள்ளி பிரபாகரன், ஆனந்தி, தங்கதுரை, பாலு, சதாசிவம், சௌந்தர், மோகன்ராஜ், தமிழ்மணி, சுதர்சன், தேவராஜ், இளங்கோ, இராஜேந்திரன் உள்ளிட்ட சேலம் மாவட்டத் தோழர்கள் உடனிருந்தனர்.*

## பெரியார் முழக்க வளர்ச்சி நிதி

அருணாச்சலம் – சரண்யா இணையரின் சுயமரியாதைத் திருமணம், 27.10.2024 அன்று மேட்டூர் பெரியார் படிப்பகத்தில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி தலைமையில் நடைபெற்றது.

இவ்விழாவில் கழகத் தலைமைக்குழு உறுப்பினர் காவை. ஈஸ்வரன், நெமிலி நரேன், மணிகண்டன், அருண்குமார் உள்ளிட்டோர் பங்கேற்றனர். மேலும் மணவிழா மகிழ்வாக பெரியார் முழக்கம் வளர்ச்சி நிதியாக ரூ.1000/- வழங்கினர்.

# "சைவர்களை" அதிரச் செய்த சுயமரியாதை மாநாடு

**விடுதலை இராசேந்திரன்**

**சென்னை கழகத் தலைமை அலுவலகத்தில் 29.10.2024 அன்று நிமிர்வோம் வாசகர் வட்ட சார்பில் குன்றக்குடி அடிகளார் நூற்றாண்டு சிறப்புக் கூட்டம் நடந்தது. அடிகளார் படத்தைக் கழகப் பொதுச்செயலாளர் திறந்து வைத்து ஆற்றிய உரை. கடந்த இதழின் தொடர்ச்சி..**

மறைமலை அடிகளாருக்கும் – பெரியாருக்கும் இடையே உரசல் ஏற்பட்டாலும் சித்தாந்த மோதல் தொடர்ந்து கொண்டே இருந்தது. பெரியாரின் சுயமரியாதை இயக்கம், பார்ப்பனியத்தை மட்டுமல்ல; சைவத்தையும் கேள்விக் கேட்டது. பார்ப்பனரல்லாதார் என்பதற்காக சைவத்தின் பிற்போக்குத்தனங்களை எதிர்க்காமல், சுயமரியாதை இயக்கம் ஒதுங்கி நிற்கவில்லை.

1929 பிப்ரவரி மாதம் செங்கல்பட்டில் பெரியார் நடத்திய சுயமரியாதை இயக்க மாநாட்டின் தீர்மானங்கள், சைவர்களை அதிர்ச்சிக்குள்ளாக்கியது. ஜாதி ஒழிப்பு, புரோகித மறுப்பு, தீண்டாமை, பெண்ணுரிமை தீர்மானங்களோடு நிற்காமல், மதச் சின்னங்களை அணியக்கூடாது என்ற தீர்மானம் 'மந்திரமாவது நீறு' என்று திருநீற்றுப்பதிகம் ஓதிய சைவர்களைப் பதற வைத்தது.

குடிஅரசு – சமயங்களையே எதிர்க்கத் தொடங்குவதா? மூட எண்ணங்களுக்கு தீர்வு சமயங்களையே எதிர்ப்பதா என்று சைவர்கள் கொந்தளித்தனர். தீவிர சைவர்கள் 'சைவ சித்தாந்த மகா சமாஜம்' ஆண்டுக் கூட்டத்தை சென்னையில் கூட்டினார்கள். (1928, டிசம்பர் 25). அதைத் தொடர்ந்து தென்னிந்திய சைவ சித்தாந்த சங்கத்தின் 'ஆண்டு விழா'வும் நெல்லையில் நடத்தப்பட்டது. (1929 ஜனவரி 2)

செங்கல்பட்டு சுயமரியாதை இயக்கத்தின் தாக்கம் சைவத்தின் அடிப்படைக் கோட்பாடுகளையே அசைக்கத் தொடங்கியது. சைவப் பெரியார்கள் சென்னையில் கூடினார்கள். அந்த கூட்டம் சைவத்தின் கொள்கைகளைப் பரிசீலிக்க வேண்டிய நேரம் வந்துவிட்டது என்று அறிவித்தது. அந்தத் தனிக்கூட்டம் விவாதிக்கும் கருத்துகளை இவ்வாறு பட்டியலிட்டது.

- **நல்லொழுக்கம் வளர்க்கும் நாகரீகத்துக்கு சமயம் அவசியமா?**
- **ஆம் எனில். சமய வாழ்வின் இயல்பு என்ன?**
- **இந்நூற்றாண்டில் எத்தகைய சமயம் தேவை?**
- **சைவ சமயம் அச்சமயமாக இருக்க இயலுமா?**
- **'சைவ சமயத்தின் இன்றியமையாக் கோட்பாடுகளும் அநுட்டானங்களும் எவை?' என்பவை உள்ளிட்ட 25 வினாக்கள் விவாதிக்கப்படும் என்று அறிவித்தது. (குடிஅரசு 1929 மார்ச் 24)**

சைவர்கள் இடையே மூன்று அணிகள் உருவாகின. தீவிர சைவர்கள் – நடுத்தர சைவர்கள் – சுயமரியாதை இயக்க ஆதரவு சைவர்கள். சுயமரியாதை இயக்கத்தின் தாக்குதலில் இருந்து தப்பிக்க சில சீர்திருத்தங்களைச் செய்து கொண்டு சைவத்தை மீட்க வேண்டும் என்ற நடுத்தர சைவர்கள் எண்ணிக்கையே அதிகமாக இருந்தது. திரு.வி.கல்யாணசுந்தரம் (திரு.வி.க.), மா.பாலசுப்பிரமணிய முதலியார், சச்சிதானந்தம் பிள்ளை போன்றோர், இந்த நடுத்தர சைவப் பிரிவில் இருந்தனர். சொ.முருகப்பா, வ.உ.சிதம்பரம் பிள்ளை (வ.உ.சி), பொ.திரிகூடசுந்தரம் பிள்ளை, குத்தூசி குருசாமி, நாகர்கோயில் வழக்கறிஞர் சிதம்பரம் பிள்ளை, பாலசுப்பிரமணிய முதலியார் சுயமரியாதை இயக்க ஆதரவாளர்கள்.

சென்னையில் கணபதி விலாச நாடகச் சபையில் கூடிய கூட்டத்தில் நடுத்தர சைவர்கள் கை ஓங்கியிருந்ததால் சில சீர்திருத்தத் தீர்மானங்களோடு, சைவத்தை முழுமையாக ஏற்கும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. சைவ சமயம் எச்சமயத்துக்கும் பொருத்தமானது, நல்லொழுக்கத்துக்கு கடவுள் நம்பிக்கை அவசியம் என்ற தீர்மானங்களோடு தேவதாசி முறையை ஒழித்தல், கோயில் வழிபாட்டில் மக்களிடையே உயர்வு தாழ்வு ஒழித்தல் என்ற தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. எல்லோருக்கும் கோயில் நுழைவை வலியுறுத்தும் தீர்மானத்தில் 'தூய்மையானவர்களாக இருக்க வேண்டும்' என்ற நிபந்தனையை இத்தீர்மானம் விதித்தது. இதற்கு சுயமரியாதை இயக்கத்தில் தீவிரமாக இருந்த கோவை அய்யாமுத்து பதிலடி தந்தார்.

**"அய்யா, சைவப் பெரியாரே! தாங்கள் கோரும் "சுத்தம்" அகச்சுத்தமா? புறச்சுத்தமா? அகச்சுத்தமாயின், அகச்சுத்தமுள்ளவனுக்கு கோயில் எதற்கு? புறச்சுத்தமாயின், நாளைய தினமிருந்து தங்களை ஒரு அழுக்குள்ள குடிசையில் குடியிருக்கச் செய்து, திருநெல்வேலியிலுள்ள கக்கூசு மலங்களையெல்லாம் வாரியெடுத்து அப்புறப்படுத்துவதைத் தங்களுக்கு தொழிலாகக் கொடுத்து அதற்காகத் தங்களுக்கு மாதம் ஐந்து ரூபாய் சம்பளங்கொடுத்து, கிணற்றிலும் அனுமதிக்காமல் தடுத்து வைக்கப்பட்டால் தாங்கள் "சுத்தமாக" இருக்க முடியுமா?" என்று கேட்டார் கைவல்யம் (குடிஅரசு, 1929 ஏப்ரல் 28)**

தீண்டாமை உள்ளிட்ட கொள்கைகளை ஆதரித்த கடும் சைவர்கள், இந்த நீர்த்துப்போன தீர்மானத்தைக் கூட ஆதரிக்காமல் எதிர்த்தனர். 'சிவநேசன்' என்ற செட்டிநாட்டு இதழ் – இந்தச் சீர்திருத்தத் தீர்மானங்களைக் கடுமையாக எதிர்த்தது.

"சைவத்திருக்கோயில்களில் பாகுபாடு இன்றி எல்லோரும் செல்லலாம் என்பதற்குத் தக்க ஆதாரங்களைக் காட்ட முடியுமா? என்று ஜாதிவெறியுடன் எழுதியது அந்தப் பத்திரிகை. – (சிவநேசன் 1929 மே 1)

"தீண்டாமை சிவபெருமானால் வகுக்கப்பட்டது" என்றும் அந்தப் பத்திரிகை பச்சையாக எழுதியது. (செப்டம்பர் – 1927)

இந்த கூட்டத்தில் பங்கேற்ற வ.உ.சிதம்பரம் பிள்ளை (வ.உ.சி), சைவ சமயத்தை சீர்திருத்த திருநீறு, உருத்திராக்கம் (கழுத்தில் அணியும் உத்திராட்சம்) தேவையில்லை என்று பேசினார். தீவிர சைவர்கள் எதிர்த்ததால், வ.உ.சி அந்தக் கூட்டத்தில் இருந்து வெளியேறினார். இதுபற்றி 'குடிஅரசு' இவ்வாறு எழுதியது.

**சைவர்கள் மாநாட்டில் பங்கேற்கவரும் ஒவ்வொருவரும் உண்மையான சைவர்கள் தான் என்று, சைவச் சபையின் பரிந்துரைக் கடிதத்தைக் கொண்டுவர வேண்டும். பேசவிருக்கிறவர்கள் முன் அனுமதி பெற வேண்டும். தீர்மானங்கள் கொணர விரும்புவோர் முன்கூட்டியே எழுத்தில் அனுப்ப வேண்டும் என்ற கடுமையான விதிகள் உருவாக்கப்பட்டன. சுயமரியாதை இயக்க ஆதரவு சைவர்கள் உள்ளே வந்துவிடுவதைத் தடுக்க எடுக்கப்பட்ட முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் இவை**

**"விஷயாலோசனைக் கமிட்டியில் திருவாளர் வி.ஓ.சிதம்பரம் பிள்ளை, திரிகூடசுந்தரம் பிள்ளை முதலியவர்கள் கூட்டத்திற்கு அனுமதிக்கப்படவில்லையாம். இதனால் திரு. சிதம்பரம் பிள்ளை அவர்கள் சைவப் பெரியார் மகாநாட்டிற்கு வந்ததில் சைவத்தில் மற்றவர்களையும் பற்றுக்கொள்ளச் செய்வதற்குப் பதிலாகச் சைவத்தில் இருந்து பிரிந்து போக நேரிட்டது தான் சைவப் பெரியார் மகாநாட்டின் பலன் என்று சொல்லிக்கொண்டு வெளியேறிவிட்டாராம். (குடிஅரசு ஏப்ரல் 7, 1929)**

நெல்லையில் நடந்த மாநாட்டிலும் தீவிர சைவர்களுக்கும் – நடுத்தர சைவர்களுக்கும் மோதல் ஏற்பட்டன. வறட்டுச் சைவத்துக்கு நெல்லை மாநாடு நெருக்கடியை உருவாக்கியதாக பெரியாரின் 'ரிவோல்ட்' (ஆங்கில இதழ், ஏப்ரல் 10, 1929) எழுதியது.

கடும் சைவர்கள் எப்படிப்பட்டவர்களாக இருந்தார்கள் என்பதற்கு சான்று சென்னை தனிக்கூட்டத்தில் நடந்த கூத்து. அந்தக் கூட்டத்துக்கு அனுமதிக்கப்பட்டவர்களிடம் சைவம் குறித்தக் கேள்விகள் கேட்கப்பட்டு அதற்கு சரியான விடை தந்தவர்கள் மட்டுமே உள்ளே அனுமதிக்கப்பட்டனர். சைவத்தில் சீர்திருத்தம் வேண்டும் என்று பேசிய பொ.திரிகூடசுந்தரம் பிள்ளை ஓர் காந்தியவாதி, சுயமரியாதை இயக்க ஆதரவாளர் அல்ல. கூட்டத்தில் பங்கேற்க அவரது சைவப்புலமைக்கு தேர்வு வைத்தவர்கள், சரியான பதில் இல்லை என்று கூட்டத்தில் பங்கேற்க அனுமதி மறுத்தன்ர். மிகக்கடுமையான விவாதத்திற்குப் பிறகு அவருக்கு அனுமதி கிடைத்தது.

அதே காலகட்டத்தில் பெரியார், செங்கல்பட்டில் நடத்திய சுயமரியாதை மாநாட்டுக்கு பெண்கள், விதவைகள், தாசிகள் என்று கூறப்படுவோர் அனைவரும் வர வேண்டும் என்று அழைப்பு விடுத்தார். சைவத்துக்கு சுயமரியாதை இயக்கத்துக்கான கொள்கை முரண்பாடுகளை உணர்த்துகிறது. இதைத் தொடர்ந்து 1929, மே மாதத்தில் கடலூர் திருப்பாதிரிப்புலியூரில் மறைமலை அடிகளார் தலைமையில் நடந்தது.

நடுத்தர சைவர்கள் இம்மாநாட்டிலும் குழப்பம் வந்துவிடக்கூடாது என்று முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். மாநாட்டில் பங்கேற்கவரும் ஒவ்வொருவரும் உண்மையான சைவர்கள் தான் என்று, சைவச் சபையின் பரிந்துரைக் கடிதத்தைக் கொண்டுவர வேண்டும். பேசவிருக்கிறவர்கள் முன் அனுமதி பெற வேண்டும். தீர்மானங்கள் கொணர விரும்புவோர் முன்கூட்டியே எழுத்தில் அனுப்ப வேண்டும் என்ற கடுமையான விதிகள் உருவாக்கப்பட்டன. (நவசக்தி ஏடு, 1929, மே 8)

சுயமரியாதை இயக்க ஆதரவு சைவர்கள் உள்ளே வந்துவிடுவதைத் தடுக்க எடுக்கப்பட்ட முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் இவை. நடுத்தர சைவர்கள் சுயமரியாதை இயக்க ஆதரவு சைவர்களை விலக்கி வைக்கும் நோக்கத்தில் வெற்றிபெற்றனர். இந்த மாநாடு ஆறுநாள் நடந்தது."சைவத்தில் எந்தச் சீர்திருத்தமும் பழைய கோட்பாடுகளுக்கு உட்பட்டே இருத்தல் வேண்டும். திருநீறு, உத்திராட்ச மாலை அணிவது கட்டாயம்" இவைகளை ஏற்போரே சைவர் என்று தீர்மானங்களை நிறைவேற்றியது. சைவர்களை ஒரு கட்டமைப்புக்குள் திணிக்கும் முயற்சியாகவே இருந்தது.

தீவிரமான சைவர்கள் கூட பார்ப்பன எதிர்ப்பாளர்களாகவே இருந்தனர். ஆனால் செங்கல்பட்டு சுயமரியாதை இயக்க மாநாடு சைவத்துக்கு தந்த அதிர்ச்சி வைத்தியத்தின் காரணமாக அவர்கள் பார்ப்பனர்களோடு சமரசம் செய்து கொண்டு சுயமரியாதை இயக்கத்தை எதிர்க்கத் தொடங்கினர். கடும் சைவரான பொ.முத்தையா பிள்ளை மாநாட்டுத் தீர்மானங்களைக் கடுமையாகக் கண்டித்தார். "பார்ப்பன துவேஷம், வடமொழி துவேஷம் காரணமாக மனம் போனவாறு சைவத்தில் மாறுதல் செய்யக்கூடாது" என்று எழுதினார். (சிவநேசன், 1929, மே)

சைவத்துக்கு எதிரான 'வேதாந்தம்' என்ற பார்ப்பனக் கருத்தியலை ஏற்றுக் கொண்டிருந்த கோ.வடிவேலு செட்டியார் 'லோகோபகாரி' என்ற பத்திரிகையை நடத்திவந்தார். சுயமரியாதை இயக்கத்தை ஒழிக்க, மாறுபட்ட சிந்தனைகளைக் கொண்ட அமைப்புகளோடும் இணைந்து செயல்பட தீவிர சைவர்கள் முடிவு செய்தனர். வேதாந்தத்தைப் பரப்பும் 'லோகாபகாரி' பத்திரிகையையும் பயன்படுத்தலாம் என்று கடும் சைவர்கள் கூறினார்கள். திரிப்பாதிரிப்புலியூர் மாநாடு நிறைவேற்றிய ஒரு தீர்மானம் இவ்வாறு கூறுகிறது."சைவ சமயத்தவர்கள் கடவுள் நம்பிக்கை உண்டு என்ற கொள்கையைப் பாதுகாப்பதிலும் பொதுநலம் கருதிய அருளொழுக்கத்தைப் பரப்புவதிலும் தம்மோடு இணங்கிவரும் ஏனைய சமயத்தவரோடு ஒத்துழைத்தல் வேண்டும். (சித்தாந்தம் இதழ் : 1929, ஏப்ரல்)

'லோகோபகாரி'யின் ஆசிரியரும், வேதாந்தியுமான கோ.வடிவேலு செட்டியார், "சுயமரியாதை பெயரில் செய்துவரும் நாஸ்திகப் பிரச்சாரத்தை தடுக்க வேண்டி எல்லா அமைப்புகளும் ஒருங்கிணைத்து 'ஆஸ்திக சங்கம்' என்ற அமைப்பை நிறுவினார். இதன் தலைவராக சுயமரியாதை இயக்கத்தை எதிர்ப்பதையே குறிக்கோளாக கொண்டு செயல்பட்ட தெ.பொ. கிருஷ்ணசாமி பாவலர், இதன் தலைவர். தமிழறிஞர் தெ.பொ.மீனாட்சி சுந்தரம் பிள்ளையின் (தொ.பொ.மீ) சகோதரர். இந்த அமைப்பின் பொருளாளராக தெ.பொ.மீனாட்சி சுந்தரம் பிள்ளையே இருந்தார். 'குடிஅரசு' இந்த எதிர்ப்புகளை உறுதியுடன் எதிர்கொண்டது. 'ஆஸ்திகத்தை நிலைநிறுத்த சித்தாந்தத்தில் நுழைந்த கோ.வடிவேலு செட்டியார், அவர்களே! (குடிஅரசு. மே 19,1929) கனம் கோ.வடிவேலு செட்டியார் அவர்களுக்கு (குடிஅரசு. மே 26,1929) என்ற இரண்டு தலையங்கங்கள் வழியாகப் பதிலடித் தந்தது.

திருப்பாதிரிப்புலியூர் மாநாட்டுக்கு எதிர்வினையாக சுயமரியாதை இயக்க சைவ மெய்யன்பர்கள் பட்டுக்கோட்டையில் 1929 மே 26இல் மாநாடு கூட்டினர். எம்.தண்டபாணிப் பிள்ளை தலைமை தாங்கினார். சொ.முருகப்பா, சைவம் புராண சமயமாகிவிட்டது என்று கண்டித்தார். திருநெல்வேலி திருப்பாதிரிப்புலியூர் மாநாடுகள் சைவ மெய்யன்பர்களைக் கட்டுப்படுத்தாது என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

1927 – 1929 காலப்பகுதியில் சுயமரியாதை இயக்கத்துக்கும் – சைவத்துக்கும் இடையே நடந்த மோதல் படிப்படியாகக் குறையத் தொடங்கின.

(தொடரும்)

date of publication - every thursday tamil weekly Reg.No.tn/cc(S)Dn/459/22-24 licenced to post wpp no.tn/PMG(ccR)/WPP-462/22-24
puratchi periyar muzhakkam registered with the registrar of newspaper for india under no.tntam/2002/07776

## ஜாதியைப் பாதுகாக்கும் சட்டப் பிரிவுகளுக்குத் தீ வைத்த 10,000 கருஞ்சட்டை

# 1957, நவம்பர் 26; ஜாதி ஒழிப்புக்காக பெரியார் சட்டத்தை எரித்தது ஏன்?

கொளத்தூர் மணி

விடுதலை பெற்ற நாட்டில், அரசியல் சட்டம் நடைமுறைக்கு வந்து விட்ட பின்னால் தனக்குச் சமமாக உட்கார்ந்து பேசினார் என்பதற்காகவே இமானுவேல்சேகரன் அவர்கள் 1957ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் பரமக்குடிக்கு அருகேயுள்ள செல்லூரில் கொலை செய்யப்படுகிறார். அது மீண்டும் பெரியாரின் மனதை அதிரச் செய்தது. இது குறித்து 2.11.1957 அன்று 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' ஏட்டில் ஒரு பேட்டியில், 'இதற்கு சரியான நடவடிக்கை எடுக்காவிட்டால் நானே வீதியில் இறங்கிப் போராடுவேன்' என்று கூறினார். அந்த அளவிற்குப் பெரியார் மனதில் ஒரு தாக்கத்தை இந்நிகழ்வு ஏற்படுத்தியிருக்கிறது.

இவையனைத்தும் சேர்த்துத் தான் பெரியார் ஒரு மாநாட்டைக் கூட்டுகிறார். பெரியாரியத் தொண்டர்கள் அந்த மாநாட்டிற்கு ஏற்பாடு செய்கிறார்கள். பெரியாருக்கு எடைக்கு எடை வெள்ளி வழங்கும் நோக்கத்தோடும், பெரியாருக்குப் பிறந்தநாள் விழா கொண்டாடும் நோக்கத்தோடும் தஞ்சையில் ஒரு மாநாட்டைக் கூட்டுகிறார்கள். 1957ஆம் ஆண்டு நவம்பர் 3ஆம் தேதி தஞ்சையில் அந்தச் சிறப்பு மாநாடு நடைபெறுகிறது. எடைக்கு எடை வெள்ளி வழங்கப்படுகிறது. இம்மாநாடு தான் தமிழ்நாட்டில் அதிகளவில் மக்கள் கூடிய நிகழ்வு என்று பதிவாகியுள்ளது. 3 இலட்சம் மக்கள் கலந்து கொண்டதாகக் குறிப்பிடுகிறார்கள்.

தஞ்சை மாநாட்டில் பெரியார் ஜாதி ஒழிப்பைப் பற்றி மிக ஆவேசமாகப் பேசுகிறார். தன்னுடைய தொண்டர்களிடம் ஒரு கேள்வியை முன்வைக்கிறார். ஜாதியை ஒழிப்பதற்கு ஆயிரம் பார்ப்பனரைக் கொன்றால்தான் முடியும் என்றால், கொல்லத் தயாராக இருக்கிறீர்களா? என்று கேள்வி எழுப்புகிறார். மக்கள் ஆரவாரித்து உடன்பாடான பதிலைக் கொடுக்கிறார்கள். அந்த மாநாட்டில் தான் ஜாதியைப் பாதுகாக்கிற இந்தச் சட்டப் பிரிவுகளை நீக்கவில்லை என்றால், வருகிற நவம்பர் 26 நாளன்று அரசியல் சட்டத்தில் ஜாதியை பாதுகாக்கும் பிரிவுகளை எரிப்போம் என்று அறிவிக்கிறார்.

நவம்பர் 26-அய் அவர் தேர்ந்தெடுத்தார் என்றால், அரசியல் சட்ட வரைவு எழுதப்பட்டு அதை நவம்பர் 25 அன்று நாடாளுமன்றத்தில் நம்முடைய பெரும் மதிப்பிற்குரிய அம்பேத்கர் அவர்களால் முன் வைக்கப்பட்டு அதற்கான ஒப்புதலைக் கொடுக்குமாறு நாடாளுமன்றத்தைக் கோருகிறார்; 1949 ஆம் ஆண்டு நவம்பர் 26 ஆம் நாள் தான் அந்த அரசியல் சட்டத்திற்கான ஒப்புதல் வழங்கப்பட்டது. எனவே தான் அதை அரசியல் சட்ட தினமாக *Constitution Day* என்று கொண்டாடுகிறார்கள்.

### அவசர சட்டம்

எனவே அந்த நாளில் நாங்கள் அரசியல் சட்டப் பிரிவுகளை எரிப்போம் என்று பெரியார் அறிவித்தார். உடனடியாகத் தமிழ்நாடு அரசு விரைவாகச் செயல்படத் தொடங்கியது. பெரியாருக்கு ஆதரவாக இருந்த காமராசர் முதலமைச்சராக இருந்தாலும் கூட காவல்துறை - உள்துறை என்பது பக்தவச்சலம் என்கிற ராஜாஜியின் ஆதரவாளர் கையில் தான் இருந்தது. பக்தவச்சலம், சி.சுப்பிரமணியம் என்கிற இராஜாஜியின் ஆதரவாளர்கள் இருவருமாக சேர்ந்து அந்த சட்டத்தை உடனடியாகக் கொண்டு வர வேண்டும் என்று விரும்புகிறார்கள். 3 ஆம் தேதி பெரியார் பேசி முடித்தார் நவம்பர் 6 ஆம் தேதியே அந்தச் சட்ட மசோதா தாக்கல் செய்யப்படுகிறது. ஏற்கனவே பெரியார் தேசியக் கொடியை எரிப்பேன் எனச் சொல்லி இருந்ததையும், 1952 ஆம் ஆண்டு தேவைப் பட்டால் அரசியல் சட்டத்தை எரிக்க நேரிடும் என்று சொல்லி இருந்ததையும் கணக்கில் கொண்டு ஏற்கனவே தயாரித்து வைக்கப்பட்டிருந்த அந்த மசோதாவை அவர்கள் அவசர அவசரமாகத் தாக்கல் செய்கிறார்கள். அது விவாதத்திற்குப் பின்னால் நவம்பர் 11ஆம் நாள் சட்டமாக்கப்பட்டது. அது தான் தேசிய சின்னங்கள் அவமதிப்பு தடுப்புச் சட்டம்.

அதன்படி காந்தியார் படத்தையோ அரசியல் சட்டத்தையோ தேசியக் கொடியையோ எரிப்பதும் அவமதிப்பதும் தண்டனைக்குரிய குற்றம்; அதற்கு 3 ஆண்டுகள் வரை தண்டனை கொடுக்கலாம் என்ற அந்த சட்டத்தை நிறைவேற்றுகிறார்கள். உடனடியாகப் பெரியார் தனது விடுதலை ஏட்டில் அறிக்கை விடுகிறார் "தோழர்களே! தெரிந்து கொள்ளுங்கள்! இப்படிப்பட்ட சட்ட எரிப்பு போராட்டத்தில் கலந்து கொண்டால் உங்களுக்கு 3 ஆண்டு சிறை தண்டனை என்பதைப் புரிந்து கொண்டு, விருப்பமுள்ளவர்கள் பெயர் கொடுங்கள்" என்கிறார்.

ஏற்கனவே பெயர் கொடுத்திருந்த 10,000க்கும் மேற்பட்டவர்கள் எல்லோரும் உறுதி செய்கிறார்கள், நாங்கள் அரசியல் சட்டத்தை எரிப்போம் என்று. அரசியல் சட்ட எரிப்பைத் தடுப்பதை நோக்கமாகக் கொண்டு பெரியாரை அரசியல் சட்ட எரிப்புப் போராட்டத்திற்கு முதல் நாள் கைது செய்து விடுகிறார்கள். 25 ஆம் தேதி பெரியாரைக் கைது செய்து வேறு ஒரு வழக்கிற்காக எனச் சொல்லியும், இன்னொன்று இந்தக் குற்றம் நிகழாமல் தடுப்பது என்பதை 151ஆவது குற்றவியல் நடைமுறைச் சட்டத்தைப் பயன்படுத்தியும் பெரியாரைக் கைது செய்கிறார்கள். 26 ஆம் நாள் போராட்டத்தில் பெரியார் கலந்து கொள்ள முடியவில்லை. காரணம் அவர் சிறையில் வைக்கப்பட்டு இருக்கிறார். இருந்தாலும் 10,000க்கும் மேற்பட்டோர் அந்த அரசியல் சட்டத்தின் பிரிவுகளை, தமிழ்நாட்டின் எல்லாப் பகுதிகளிலும், சின்னச் சின்ன கிராமங்கள் உட்பட, எரிக்கிறார்கள்.

அந்தச் சமயத்தில் ஒரு முறை தமிழ்நாட்டுக்கு இந்திய நாட்டின் தலைமை அமைச்சராக இருந்த நேரு அவர்கள் வந்தார். வந்து பல கூட்டங்களில் பேசினார். பெரியார் போராட்டத்தை அறிவித்தவுடன் "அரசியல் சட்டத்தை ஏற்க மறுப்பவர்கள் உடனடியாக மூட்டை முடிச்சைக் கட்டிக் கொண்டு வெளிநாடுகளுக்கு எங்கு வேண்டுமானாலும் செல்லலாம்' என்று கூறுகிறார். இங்கு வந்த பின்னாலும் "அவர்கள் இருக்க வேண்டிய இடம் பைத்தியக்கார மருத்துவமனை அல்லது சிறைச் சாலையில் தான் இருக்க வேண்டும்" என்று பேசுகிறார். இது டிசம்பர் மாதம். தமிழ்நாட்டில் அப்படிப்பட்ட பேச்சு வந்தவுடன் உடனடியாக வழக்கு விசாரணை நடந்த வழக்குகளில் எல்லாம் தண்டனையை உயர்த்தி கொடுக்கத் தொடங்குகிறார்கள்.

### நேரு பேச்சுக்குப் பிறகு

சிலருக்கு மட்டும் ஓராண்டு, ஒன்பது மாதங்கள் வரை மட்டுமே கொடுக்கப்பட்டு வந்த தண்டனையானது நேருவின் வருகைக்கு பின்னால் 18 மாதங்களாக, 2 மடங்காக உயர்கிறது.அதற்கு பின்னால் 4000 பேர் தண்டிக்கப் பட்டார்கள். அவர்களை அரசியல் கைதிகளாக நடத்தவில்லை. விடுதலைப் போராட்டம் நடந்த காலத்தில் காங்கிரஸ்காரர்கள் கைது செய்யப் பட்டால் அரசியல் கைதிகள் என்று கூறி உரிய மரியாதையுடன் நடத்தப்பட்டிருக்கிறார்கள். ஆனால் அரசியல் காரணங்களுக்காக நடைபெற்ற இந்த போராட்டத்தில் கைதானவர்கள் கிரிமினல் குற்றவாளிகளைப் போன்று நடத்தினார்கள். கடுமையான வேலைகள் வழங்கப்பட்டன. சரியில்லாத உணவுகள் வழங்கப்பட்டன. சிறைக்குள்ளேயே போராட்டம் நடந்தது. கைது செய்யப்பட்ட இரண்டு மாதத்திலேயே உணவு சரியில்லாததால் வயிற்றுப் போக்கு போன்றவை ஏற்பட்டது. இதனால் சிலர் இறக்க நேரிட்டது. குறிப்பாக பட்டுக்கோட்டை ராமசாமி என்பவரும் மணல்மேடு வெள்ளைச்சாமி என்பவரும் 1958 ஜனவரி மாதமே சிறைக்குள்ளேயே இறந்து போனார்கள். அந்த உடல்கள் கூட சிறைக்குள்ளேயே புதைக்கப்பட்டன. ஆனால் அன்னை மணியம்மையார் நடத்திய போராட்டமும், நேரடியாக உள்துறை அமைச்சரிடம் செய்த விவாதமும் அந்த உடல்கள் இவர்களுக்குத் தோண்டியெடுத்துக் கொடுக்கப்பட்டது. உடல்களை கொடுங்கள் என்று சொல்வதற்கு ஒரு நாள் முன்பு இன்னொருவரும் இறந்து போனார். அவரையும் சேர்த்து அடக்கம் செய்தார்கள்.

இவர்கள் இரண்டு பேர் மட்டும் இறக்கவில்லை. எங்கே இவர்கள் தொடர்ந்து சிறையில் இருந்தால் இறந்து விடுவார்களோ என்று அச்சப்பட்டு இடையிலேயே விடுதலை செய்யப்பட்டார்கள். விடுதலை செய்யப்பட்டு ஒரு வார காலத்திற்குள் இறந்தவர்கள் 13 பேர். மொத்தம் 18 பேர் இந்த போராட்டத்தில் சிறையிலும் வெளியிலும் இறந்தார்கள் என்பது வரலாற்றில் குறிப்பிடப்பட வேண்டிய செய்தியாகும். அதுமட்டுமில்லை கைது செய்தவர்களைப் பற்றியும், கைது செய்யப்படாதவர்களைப் பற்றியும் பல செய்திகள் உள்ளன. கைக் குழந்தையோடு பெண்கள் பலர் கைதாயிருக்கிறார்கள், இளைஞர்கள், மாணவர்கள் கைதாகியிருக்கிறார்கள்.

### சோழபுரம் தோழர்களின் உறுதி

கும்பகோணத்தை அடுத்த சோழபுரத்தில் சட்டத்தை எரித்த 139 பேர் கைது செய்யப்பட்டு திருப்பனந்தாள் காவல் நிலையத்திற்கு அழைத்து செல்லப்பட்டிருக்கிறார்கள். நள்ளிரவு காவல் உதவி ஆய்வாளர், 40 பேர்கள் மீது மட்டும் வழக்குப் பதிவு செய்துகொண்டு மீதி 99 பேர்களைத் திரும்பிப் போகச் சொல்லியுள்ளார். நாங்களும்தானே எரித்தோம், எங்களை ஏன் அனுப்புகிறீர்கள் என வினவியதற்கு, நீங்கள் எரித்ததை நான் பார்க்கவில்லை என்று கூறியதற்கு, அப்படியானால் உங்கள் கண் முன்னே இப்போது மீண்டும் எரிக்கிறோம், கைது செய்யுங்கள் என்று வாதாடியிருக்கிறார்கள். இருட்டில் எரித்தால் எப்படி அடையாளம் கண்டு கைது செய்ய முடியும் என அவர்களை விரட்டியிருக்கிறார். அடுத்த நாள் அவர்கள் 99 பேரும் சட்ட நகல்களை பாதியளவு எரித்து, எரியாத பகுதிகளையும், எரித்த சாம்பலையும் சேர்த்து வைத்து, உள்துறை அமைச்சருக்கு பார்சல் அனுப்பியுள்ளனர். உடன் எழுதியனுப்பிய கடிதத்தில், காவல் உதவி ஆய்வாளரின் கடமை தவறிய புகாரையும், தங்களின் பெயர், முகவரி விவரங்களையும் எழுதியதோடு, நேற்று தாங்கள் எரித்ததைப் பேருந்து நிலையத்தில் பார்த்த ஏராளமான சாட்சிகள் உள்ளனர் என்றும், குறிப்பாக, காங்கிரஸ் சட்டமன்ற உறுப்பினர் திரு. இராமாமிர்த தொண்டைமானும் பார்த்தார் என்றும், எனவே தங்களை கைது செய்யுமாறு காவல்துறைக்கு ஆணையிடுமாறு கேட்டு விண்ணப்பம் அனுப்பியுள்ளனர். ஒருவேளை தங்களுக்கு சட்ட எரிப்புப் போராட்டத்தில் கலந்து கொள்ளவில்லை என்ற அவப்பெயர் வந்துவிடக் கூடாது என்ற பதைபதைப்பு அவர்களுக்கு. திருச்சி வாளாடியைச் சேர்ந்த பெரியசாமியைப் பற்றிச் சொல்லுவார்கள், அப்போது ஆளுநராக இருந்த விஷ்ணுராம் மேதி சிறையைப் பார்வையிட்ட போது ஒரு 16 வயது சிறுவன் திருச்சி சிறையில் இருந்திருக்கிறார். திருச்சி சிறையில் மட்டும் 1940 பேர் இருந்ததாக கணக்குகள் கூறுகின்றன. அப்போது ஆளுநர் சிறுவனை அழைத்து "ஏதோ தவறு செய்து விட்டாய் உன்னை மன்னித்து விடுதலை செய்ய நான் தயாராக இருக்கிறேன், இனிமேல் இப்படி செய்ய மாட்டேன் என்று எழுதிக் கொடுத்தால் விடுவிக்கிறேன்" என்று சொல்லுகிறார் ஆளுநர். ஆனால் அந்த சிறுவர் சொல்லுகிறார் "நீங்கள் விடுதலை செய்தாலும் வெளியே சென்று அரசியல் சட்டத்தை மீண்டும் எரிப்பேன்" என்று அந்த மாணவர் சொல்கிறார். 'கடவுள் தான் உன்னை காப்பாற்ற வேண்டும்' என்று சொல்லிவிட்டு ஆளுநர் போய் விடுகிறார். மற்றொரு பக்கம் அதே வாளாடியைச் சேர்ந்த பெரியசாமி என்கின்ற மற்றொரு 13 வயது மாணவன் தூத்துக்குடியிலே இருக்கிற சிறுவர் சிறையிலே வைக்கப்பட்டிருக்கிறான். அவனுக்கும் உடல்நலம் குன்றிப்போய் மிகவும் பாதிக்கப்பட்ட நிலையில் 'மன்னிப்பு எழுதி கொடுத்துவிட்டு வெளியே செல்' என்கிறார்கள். முடியாது என்று மறுத்து சிறையிலேயே அவன் மடிந்தும் போனான்.

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS Under WPP
Posted : November 22, 2024

owner and publisher by : k. rajendran, from 29, Journalists colony, thiruvalluvar nagar, thiruvanmiyur, chennai - 600 041.
and printed by : S. Theesmas, at lilly soosai offset, new no.8, old No.12/1, mohammed usain lane, royapettah, chennai - 600 014.
editor ; k. rajendran